66
166

உ

ஓம்-தத்-சத்.



பரம்பைபமாநகர்

ஏகாம்பரஸ்வாமிகள் அருளிச்செய்த

உலக

# இயற்கைப் பாடல்.

**M. அகஸ்தியரவர்களால்**

எழுதப்பெற்று

**ஸ்ரீமான் S. N. தேவேந்திர அய்யர்**

தனோபகார முயற்சியால்

...ரை சென்ட்ரல் மார்க்கட்தெரு,

... விலாச அச்சியந்திரசாலையிற்

...பிக்கப் பெற்றது.

1933 (பை 3

Q2:417
N33.
170379

உ

ஓம்-தத்-சத்.

# உலக இயற்கைப் பாடல்.

வெண்பா.

முத்திக்கு வித்தான மூர்த்தியா மிந்தவனி
பித்தனு ரின்பமுடன் பெற்றெடுத்த—அத்திமுகத்
தையனே யன்பன்முன் னைவனுடனே கிருபை
செய்யவரு வாய் மகிழ்ந்தே.

---

(நொண்டிச் சிந்து)

சத்திவடி வேல்முருகா உன்னை
சந்ததம் பணிந்தேன் திரு மால்மருகா
சரவண பவகுகனே உயர்
சாமிசண் முகமான சற்குணனே
ஆராதரமாம் பொருளே நம்பு
அடியனென் னிடர்தீர்க்கும் ஆதியருளே
யாளியேறுங் காளிதந்த அந்த
அற்புத மிகுந்திலகு மருமைமைந்தா
அண்டமெங்கும் புகழ்படைத்த முனம்
அகஸ்திய முனிவர்க்கு அருள்கொடுத்த (சத்)

# இயற்கைப் பாடல்.

## நூல்.

தீண்டப்படாதே சாமி தொடக்கூடாதே என்ற மெட்டு.

பின் முடுகு..

வேலையில்லையே ஜெகத்தில் வேலையில்லையே என்னும்
வேலையில்லையே சாலகுருவாம்
நீலகண்டனை நினைப்பதல்லால் (வே)

பாரிலுள்ளோரே எனைப் பாதுகாப்பீரே தினம்
பாடுபட்டுமே வீடுகட்டியே
ஓடிப்போவார் ஒழுங்கைப்பார்த்து (வே)

கோபங்கொள்ளாதீர் என்மேற்கோளைச்சொல்லாதீர் தன
கோடிகோடியாய் தேடித்தேடியே (ந்
நீடிநின்றிட நெறியில்லாதால் (வே)

அன்னைதந்தையோ என்னை அகன்றனரையோ பாரில்
ஆதிமுதலாய் ஈதெனவுற்று
சோதித்துமேஹம் சோஹம்தவிர (வே)

பாடுபட்டாரே பலபேர்கள் கெட்டாரே அதை
பார்த்துமே எந்தன் நேத்திரமது
பூத்துப்போனதால் ஆத்திரமிகும் (வே)

நாளும்போகுதே நரை திரையுமாகுதே அதை
நாடிடாமலே ஓடித்திரிந்து
வாடிமடிய மனமிலாதால் (வே;

1891
784.0954

எண்ணம்போலவே மனமீ டேறவில்லையே ஜெக
தீசனெழுத்தின் யோசனைப்படி
காசினிதனில் கண்டுக்கொண்டபின் (வே)

ஓடும்மனமே நாம்ஒடுக்கத்தினமே குருசொல்
ஓதுதல்மிக நீதமதாக
ஆதரமெனும் மாசைத்தவிர (வே)

காலங்கலியே கொடுங் கசடர்வலியே ஒரு
காரியம்செய்து மீறியபொருள்
வாரியேகொண்டு வழக்கில்போவதால் (வே)

என்னசொல்குவேன் நான்எங்குசெல்குவேன் நம்பி
ஏழையென்றொரு தாளைக்கொடுத்தால்
பாழதாக்கி பகைசெய்வதால் (வே)

நம்பலாரையோ நன் நயம் சொல்வீரையோ இந்த
நானிலந்தனில் ஞானமிலாதார்
பானுவினோடும் பகைஎன்பதால் (வே)

அன்பையுள்ளோரே இதை அனுசரிப்பீரே இந்த
ஆழமாகிய சூழும்பந்தமே
மீளத்தந்திர மேசெய்வதால்

கண்ணுங்காதுமே கைக் காலும்மேலுமே கெட்டோர்
கண்ணன்பதமே யெண்ணமில்லாமற்
பண்ணின்வாழ்வை மகிழ்ந்திருப்பதால் (வே)

இந்தஜென்மமோ பின்னல் ஏதுஜென்மமோ என்று
எங்குதேமன மோங்கியேமிக
பாங்குடன் ஈசன் பணிதவிர்த்து (வே)

மரணமாத்திரை நித்தம் வரவும்பாத்திரே உற்றால்
வாழும்நாளும் பாழாய்ப்போவதால்
தாழவுரைத்தேன் தயைபுரிவீர் (வே)

பெண்ணுமாணுமே நின்று பேசநாணுமே இப்போ
பேதமில்லைபோல் காதலுடனே
சாதம்போகும் காட்சிகண்டுமே (வே)

நாயகன்சொல்லே கெட்டநாரிக்கோர்புல்லே போல
நாட்டிலுமயல் வீட்டிலுங்கேட்டு
பாட்டிக்கதையாம் பாருலகினிற் (வே)

ஜோதிடர்களே பலவாய்ச் சொல்லுவார்களே போல
சுகமென்றெண்ணியே அகமகிழ்வோடு
ஜெகத்தினிலக்க தீங்குவரலால் (வே)

தாலிகட்டியே மறுநாள் தழலைமூட்டியே வைத்த
சங்கதிதனை யிங்கனங்கண்டு
தங்கிநின்றிட தான்பயத்தால் (வே)

பாட்டன்முப்பாட்டன் முனம்பகருநாப்பாட்டன் வழி
பார்த்திடநம்மைச் சேர்த்திடவரும்
கூற்றனவனின் கொடுமைக்கண்டு (வே)

நன்மைவந்தாலே இது நடந்ததென்றாலே என
நாட்டமேயுள்ள நாட்டினறிவர்
வாட்டமில்லாமற் வழுத்துஞ்சொல்லால் (வே)

தீமைவந்தாலே ஜெகத் தீசனினலே இது
தீர்ந்ததிப்படி வேந்தர்க்கானாலும்
ஆர்ந்தபொருளி னருளே என்பதால் (வே)

மூன்றுகுணமே நமக்கு மூன்றுவிதமே நிற்க
முடிவுமறியேன் அடியுமறியேன்
கடுகிகுருவின் பூசைதவிர (வே)

பஞ்சதன் மாத்ரை நம்மை பகைக்குமோர் திரை அதை
பார்த்து மெள்ளவே சேர்த்த குருசொல்
வார்த்த அமுத முண்ணல்தவிர (வே)

மக்களைப்பெற்றோரே என்றுமகிழ்ந்திருப்பாரே பின்னால்
மாதா பிதாவைத் தீது செய்திடும்
பாதகர்களைப் பார்த்ததா லினி (வே)

வளர்த்த கிடாயே நெஞ்சில் வந்து பாயுமே போல
மண்டுப் பணமே சண்ட னெனவே
திண்டுமுண்டாய்த் தீங்கு செய்வதால் (வே)

ஆசையுடனே செய்கை அவனிக்கடனே என்று
யாதா மொருவர் சோதனை செய்து
நீதமடையும் நேர்மை யாலே (வே)

குயிலுங் கூவுதே சங்கு கோஷம் மேவுதே அந்த
கோலமேதினம் சாலவேயுற்று
சிலமடைய செய்குவதல்லால் (வே)

பார்ப்பாரென்றோரே வெகு பக்தியுள்ளோரே வேத
பாராயணங்கள் சிருடன் ஓதும்
காரணங்கெடு கலியுகத்தில் (வே)

சாமியென்றோரே மகா சாந்தமுள்ளோரே பார்த்தால்
சதிசெய்தன்பரின் நிதிபறித்திடத்
த்தியி துவெனத் தாவிநிற்பதால் (வே)

பெருமையாட்களே பஞ்சாயம் பேசுவார்களே அதில்
பேதமின்றியே யோதிடுபவர்
பூதலந்தனிற் போற்றக் குறைவால் (வே)

பக்தியுள்ளோரே முத்தரை பயந்துநடப்பாரே அந்தப்
பாடமேபெரும் பழையதாகி
ஓடிவிட்டதால் ஓர்ந்து ஓர்ந்து (வே)

வாயாடியாய் மொட்டை வளர்ந்ததாடியாய் யுள்ள
வாளையேநம்பி நாளுங்களித்து
தாளங்கொட்டிய தன்மையாதலால் (வே)

பிழையில்லாதாரே மிக்க பேசவெண்ணுரே அவளைப்
பித்தளையாக்கி நித்தமுமட்டி
பித்தனைநம்பி பேதளிப்பதால் (வே)

வெள்ளைவேட்டியே காவி மேன்மைகாட்டியே பார்த்து
மேதினிநல்ல சாதகனெனக்
காதல்கொண்டுமே கஷ்டமுறலால் (வே)

நீதியென்றோரை நல்ல ஜாதிஎன்றோரைப் பார்த்தால்
நேமம்போலவே தாமதகுணம்
ஆமோசொல்ல அறிவினாலே (வே)

வியாபாரமே செய்தால் வெகுவிசாரமே என்று
வேண்டாமென்றாலும் தூண்டுமாசையால்
நீண்டபொருளின் நிலைகுலைவதால் (வே)

ஞானமுள்ளோரே நல்ல ஞாயமுள்ளோரே என்று
நாடியவரைத் தேடிச்சேரிட
கூடிவந்து குடிகெடுப்பதால் (வே)

இப்போசொன்னசொல் கடல் இப்பின்முத்துநல் எனப்
யாதாமொன்றை தாதாவென்றால் (பின்
தீதுவிளைந்து திண்டுமுண்டாவதால் (வே)

கட்டும்பெண்ணையே விட்டு கசடிதன்னையே நம்பி
காலங்கழிக்கும் கோலத்தாலே
சீலதர்ம சீர்த்திக்குறைவால் (வே)

அன்னைமார்களே எந்தன் அப்பன்மார்களே இந்
ஆழக்கடலே சூழுமிருந்த
பாமுலகோர் பாட்டைப் பார்த்து (வே

கருப்பினுட்கடையே வெள்ளை ஆடுஎன்பரே அந்த
காரணந்தனை சீருடன் கண்டும்
பூரணந்தனைப் போற்றல்செய்வதால் (வே)

சாவல்கூவவே கோழி கூவுதென்னவே சொல்லும்
சங்கதியதின் சங்கைமிருந்து
இங்கெனக்கொரு எக்கமுறலால் (வே)

பாரில்யாகமே பெரும் பவுண்டரிகமே சொன்ன
பாகமெதுவோ ஆகமமென்று
யேகப்பொருளை யேதொழலால் (வே)

என்னசெய்தாலும் மறைவாய்எதுசெய்தாலும் முன்போ
எட்டிவெட்டிடத் திட்டமான (ல்
வட்டீச்சக்கர வலியில்லாதால் (வே)

மங்களம்!!

முற்றிற்று.

எங்கும்தங்கும் மங்களஸ்வ ரூபம்
இங்கும் அங்கும் எங்கென்றலைவார் இழிவுடையோர்

---

இந்த உலக இயற்கைப்பாடல் இயற்றிய
ஏகாம்பர சுவாமிகளின் சீஷரில் ஒருவரான
**M. அகஸ்தியரால் இயற்றப் பெற்ற**

# அகஸ்தியர் ஞானயோகபற்று

அதாவது:- சகலதெய்வங்களின் துதிப்பாடல்கள், நீதிவிளக்கம், திருப்புகழ், திருமந்திரம், திருவாசகம், பாம்பாட்டிச்சித்தர் பாடல், கிளிக்கண்ணி, பராபரக் கண்ணி, ஆனந்தக்களிப்பு, தியாகராஜகீர்த்தனை ஓங்கார விரிவு மானசபூஜை, சண்முகிமுத்திரைவியப்பு. நாதானுசந்தானம் இன்னும் அநேகஞானவிஷயங்க ளடங்கியுள்ள மேற்கூறிய மெட்டுகளில் புதிதாய் அச்சிடப் பெற்ற 100 பக்கமுள்ள புத்தகம். தேவையுள்ளவர்கள் புதுமண்டபம்கடைகளிலும் காண்பாளையம்2வது தெரு M. அகஸ்தியரிடமும் பெற்றுக்கொள்ளலாம்

**M. Agasthiyer.**